அனுப்புநர்
திருமதி.ப்பி.எஸ். லீலா அலெக்ஸ்,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஆட்சியரகம்,
சத்துவாச்சாரி, வேலூர்-9.

பெறுநர்
1. முதன்மை கல்வி அலுவலர்,
மாவட்ட ஆட்சியரகம், வேலூர்.
2. அனைத்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அனைத்து வட்டாரங்கள், வேலூர் மாவட்டம்.
3. செயல் அலுவலர்கள்,
அனைத்து பேரூராட்சிகள், வேலூர் மாவட்டம்.

ந.க.எண்.N1/539/2026, நாள்: 01.09.2026.

அய்யா/அம்மையீர்,

பொருள் : பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம்-மகளிர் திட்டம் **(PKBFS)** – வேலூர் மாவட்டம் - 2026-2027 ஆம் ஆண்டிற்கு 7 வட்டாரங்கள் மற்றும் 4 பேரூராட்சி பகுதிகளிலுள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணகர்களுக்கு காலை உணவு திட்டம் 17.09.2026 அன்று விரிவுப்படுத்துதல் - மாணகர்களுக்கு தட்டு மற்றும் டம்ளர் வழங்க தெரிவித்தல் - சார்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்:20, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்:15.07.2026.
2. சென்னை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மேலாண்மை இயக்குநர் அவர்களின் நிலையான வழிகாட்டி செயல்முறைகள் ந.க.எண்:252/PC-1/2026, நாள்:06.08.2026.

*****

பார்வை (1) மற்றும் (2)இல் காணும் கடிதங்களில் 2026-27ஆம் ஆண்டில் அனைத்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 அம் வகுப்பு வரை பயிலும் மாணகர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் வருகின்ற 17.09.2026 அன்று முதல் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

மேற்படி வேலூர் மாவட்டம், 7 வட்டாரங்கள் மற்றும் 4 பேரூராட்சி பகுதிகளிலுள்ள 248 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையுள்ள மாணகர்களுக்கு காலை உணவு உட்கொள்ளும் பொருட்டு ஒரே மாதிரியான தட்டு மற்றும் டம்ளர் பயன்படுத்தும் வகையில் நிலையான வழிகாட்டி நெறிமுறைகளில், ஊராட்சி மன்றத் தலைவர், பள்ளி நிர்வாகக் குழு உள்ளாட்சி பொது நிதி அல்லது பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி (CSR Fund) மூலம் பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருட்களை ஏற்பாடு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான தகவல்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்களுக்கும், பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை), வேலூர் மாவட்டம்.
2. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), வேலூர் மாவட்டம்.
3. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் மாவட்டம்.

நகல்:

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை.